R5295

## FEAR A CAUSE OF GREAT NERVOUS TENSION

# பெரும் பதட்டத்திற்கு பயம் ஒரு காரணம்

“கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான். ”– (எபிரேயர் 13:6)

மிகவும் பதட்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கிற பயமானது உலகில் மாபெரும் தீங்குகளில் ஒன்று. இது மனிதன் சிருஷ்டிகருடன் இணக்கமாக இல்லாததின் பலனாக இருக்கிறது. தேவதூதர்களுக்கு பயம் இருக்காது என்று நாம் நிச்சயிக்கலாம். அவர்கள் தேவனுடன் இணக்கமாக இருப்பதினால், தேவன் அவர்களை அவர்களது சமாதான நிலைமையில் பராமரிக்கிறார். இதே போலவே நமது ஆதி பெற்றோர்களும் இருந்தார்கள் என்று நாம் உறுதியாக சொல்லலாம். அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட போது அவர்களுக்கு பயமில்லை. தெய்வீக பாதுகாப்பு அவர்கள் மேல் இருந்தது. ஆனால் பாவம் வந்தபோது, சாபம் பின் தொடர்ந்தது. பாவம் மற்றும் மரணத்தின் ஆறாயிரம் வருட ஆளுகையில் மனிதன் மிகவும் பயப்படுகிறவனானான். தன்னால் சமாளிக்க முடியாத சக்திகள் தனக்கு வெளியே இருப்பதாக உணருகிறான். இந்த அறிவு அவனது பெரும்பாலான அவனது சந்தோஷமான வாழ்வை சூறையாடுகிறது.

பயம் இல்லாதவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விதிவிலக்கானவர்கள். நமது தலைப்பு வசனம் பயம் இல்லாதவர்களைக் குறித்து கூறுகிறது. மேலும் இது ஏன் நியாயமான நிலைமை என்பதை நமக்கு காண்பிக்கிறது. இனி அவர்கள் பயப்படமாட்டார்கள். கர்த்தர் அவர்களது சகாயராக இருக்கும் பொழுது, மனிதன் அவர்களுக்கு என்ன செய்ய முடியும். மிருகங்களின் மேல் உள்ள பயத்தைக் காட்டிலும் மனிதனின் மேல் உள்ள பயம் மிகவும் அதிகம். கவிஞன் எழுதுகிறதாவது:

“மனிதர்களிடத்தில் மனிதாபிமானமற்ற மனிதன்,

ஆயிரம் பதினாயிரம் பேரை துக்கப்படுத்துகிறான்.”

பாவத்தினிமித்தம் அநேகர் கொலைகாரர்களாகிறார்கள். வெளிப்படையாக கிரியை நடப்பிப்பதை சட்டங்கள் அடக்கினாலும் அவர்கள் கொலைகார ஆவியையும் சுயநல ஆவியையும் உடையவராயிருக்கிறார்கள். இது எல்லா வகையான தவறுக்கும் அநீதியானவைகளுக்கும் வழி நடத்துகின்றது. உண்மையிலேயே அவர்கள் ஜீவனை எடுக்காவிட்டாலும் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி கொலை செய்யலாம். இப்படியாக மற்றவர்களின் மனதில் பயத்தை உருவாக்குகிறார்கள்.

### துயர் நீங்குவதற்கான மூல ஆதாரம்

சங்கீதக்காரன் இந்த மனித பயத்திலிருந்து விடுதலையான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் போன்றவர்களைக் குறித்து கூறுகிறார். அவர்களிடத்தில் உண்மையாயிருப்பது கிறிஸ்துவினிடத்தில் அர்ப்பணம் செய்தவர்களிடத்திலும் உண்மையாகவே இருக்கும். இரட்சகரால் சாத்தியமாக்கப்பட்ட பலியின் உடன்படிக்கையின் மூலம் தேவனிடம் உடன்படிக்கையின் விசேஷித்த உறவுக்குள் வந்ததே இந்த மன சமாதானத்திற்கு காரணமாக இருக்கிறது. அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகியிருக்கிறார்கள். “பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே.” இப்படியாக தேவன் அவர்களது பிதாவானவராக இருந்து, அவர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவருடைய அன்பு, ஞானம் மற்றும் வல்லமை மேல் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்கிறார்கள்.

தேவனுடனான இந்த நம்பிக்கையினால் அவர்களுக்கு பயமில்லை. அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி செய்கிறவராயிருக்கிறார் என்ற உறுதி மொழியை அவர் கொடுத்திருக்கிறார். முதலாவது அவர்கள் இயேசுவின் சீஷர்களாக உலகத்தில் மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் அதிகமான சோதனைகளையும் துன்பங்களையும் உலகம், மாம்சம் மற்றும் சத்துருவின் மூலம் பெற்றவர்கள் என்பதை கண்டார்கள். இந்த உணர்வு அவர்களை எச்சரித்து மிரட்டியிருக்கும். அவர்கள் ஆவியில் ஜெபத்தில் பிதாவானவரிடம் சென்றதாலும், அவர் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மூலமாக அனுப்பிய செய்திகளை கேட்டதினாலும் அவர்கள் தேவன் தங்களுடன் புது சிருஷ்டியாக தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்கள். படிப்படியாக அவர்கள் “உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்” என்பதை அறிகிறார்கள்.

பிதாவானவர் தமது பிள்ளைகளின் சரியான அபிவிருத்திக்கு தேவையான எதையும் வழங்காதிருக்க மாட்டார் என்ற வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறார். எனினும் சில காயங்கள் நமக்கு வருகின்றன. இப்படியாக அவர் நமது பூமிக்குரிய வாழ்க்கையை கொடுக்க இயலச் செய்வதற்கு தேவையான அனைத்து தேவைகளையும் நமக்கு அருளுகிறார் என்பதையும் நாம் காண்கிறோம். நமது அனுபவங்கள் மூலமாக சரியான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுவதால் பரிபூரண அன்பு, நமது பரம பிதாவின் சகல அடிமைத்தனமான பயத்தையும் புறம்பே தள்ளுகிறது என்பதை நாம் காண்கிறோம். ஏனெனில் நாம் அவரை நேசிக்கிறோம், நம்புகிறோம், நாம் சத்துருவானவனுக்கு பயப்படுவதில்லை. ஏனெனில் நாம் கர்த்தரிடம் நெருங்கி இருப்பதால், சத்துருவானவன் நம்மை காயப்படுத்த அவர் அனுமதிக்கமாட்டார் என்பதை அறிந்திருக்கிறோம். சத்துருவிடமிருந்தும் சக மனிதர்களிடமிருந்தும் நாம் சோதனை அனுபவங்களை பெற வேண்டும். தேவன் அனுமதித்தால், அவைகள் நன்மை செய்யும் என்ற நோக்கத்துடன் அவர் அப்படிச் செய்கிறார்.

“என் தேவனே, நீர் சத்தியமுள்ளவரென்று நான் முத்திரை போட்டு நிச்சயப்படுத்துகிறேன்,

உம்முடைய வாக்குத்தத்தத்தில் ஒன்றும் நிறைவேறாமல் போனதில்லை!”